நீலகிரி நாடாளுமன்றத் தொகுதி அவிநாசி சட்டமன்றத் தொகுதி, அன்னூர் தெற்கு ஒன்றியம் மற்றும் அன்னூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பல்வேறு இடங்களில், 'இந்தியா' கூட்டணி நீலகிரி நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் ஆ.ராசா பொதுமக்களைச் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளைச் சேகரித்தார். உடன் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொ.அ.ரவி, கழக செய்தி தொடர்பாளர் தமிழன் பிரசன்னா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி கழக வேட்பாளர் மலையரசனுக்கு

திருக்கோவிலூர் ஒன்றியத்தில் தீவிர வாக்குச் சேகரிப்பு!

வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பிரச்சாரம்!

கள்ளக்குறிச்சி, ரிஷிவந்தியம், ஏப். 3-

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் தொகுதி திருக்கோவிலூர் ஒன்றியத்தில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி தி.மு.க. வேட்பாளர் மலையரசனுக்கு வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. திறந்தவெளி வேனில் உதயசூரியன் சின்னத்தில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருக்கோவிலூர் ஒன்றியத்தில் வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு இந்தியா கூட்டணியின் தி.மு.க. வேட்பாளர் மலையரசன் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது வீரட்டகரம் மாரியம்மன் கோவிலில் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற வேட்பாளர் மலையரசன் ஆகியோர் சுவாமி தரிசனம் செய்தனர், இதனையடுத்து தி.மு.க. வேட்பாளருக்கு அப்பகுதி பொதுமக்கள் மேளதாளம் முழங்க பட்டாசு வெடித்து, மலர் தூவி,ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்,இதனை தொடர்ந்து அரும்பாக்கம், கட்சிக்குப்பம்,எரவலம், பழங்கூர்,ஜி. அரியூர் காடியார்,பழங்கூர் வேங்கூர், மொகலார், ஆலூர், செங்கனாங் கொள்ளை,கீழதாழனூர், அம்மன் கொல்லைமேடு செட்டி தாங்கள்,உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்,அப்போது தி.மு.க. வேட்பாளருக்கு வழி நெடிக்கிலும் 'இந்தியா' கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொது மக்கள் சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் ஆரவாரத்துடன் வர வேற்றனர்.

தொடர்ந்து வசந்தம் கார்த்தியின் எம்.எல்.ஏ பொதுமக்களிடத்தில் பேசுகையில் ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதியில் கழகத் தலைவர்,தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியில் பல்வேறு எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி கொடுத்துள்ளார்,கடந்த 3 ஆண்டில் ரிஷிவந்தியம் தொகுதி அபார வளர்ச்சி அடைந்துள்ளது,அந்த அளவிற்கு அனைத்து துறைகளின் சார்பில் வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது,ஒரு காலத்தில் பின் தங்கிய தொகுதியாக இருந்த ரிஷிவந்தியம் தொகுதி தற்போது அபார வளர்ச்சி பெற்று வரும் தொகுதியாக மாறி வருகிறது,அதே போல் நல திட்ட உதவிகள் வழங்குவதில் மாவட்டத்திலேயே முதல் இடத்தில் இருக்கும் தொகுதி என்ற நிலையில் ரிஷிவந்தியம் தொகுதி உள்ளது என்பதை பெருமையாக கூறிக் கொள்கிறேன், நலத்திட்ட உதவிகளால் மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்து வருகிறது, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் மாதாமாதம் உங்களுக்கு தொடர்ந்து கிடைக்கவும், தி.மு.க. அரசின் திட்டங்கள் தொடரவும் பொது மக்களாகிய நீங்கள் தி.மு.க.வுக்கு வாக்களியுங்கள், கேஸ் சிலிண்டர் விலை ரூபாய் 500 ஆக குறைக்கப்படும், பெட்ரோல் விலை குறைக்கப்படும், இதன் மூலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் 3000 ரூபாய் மிச்சமாகும் என்பதை பொதுமக்களாகிய நீங்கள் நினைவில் கொள்ளுங்கள்,திமுக ஆட்சியில் உங்கள் குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்படுகின்றன. இந்த நிலை மென்மேலும் தொடர திமுக மற்றும் 'இந்திய' கூட்டணி கட்சியினர் மட்டுமின்றி நடுநிலையாளர்களும், பொது மக்களும் கட்சி வித்தியாசம் பார்க்காமல் திமுக வேட்பாளர் மலையரசனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து,அமோக வெற்றி பெற செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், மேலும் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி வேட்பாளரை வெற்றி பெற செய்தால் தொகுதியில் உள்ள அடிப்படை பிரச்சினைகள் அனைத்தும் உடனடியாக தீர்க்கப்படும், ஜி.அரியூரில் அரசு பாலிடெக்னிக் கல்லூரி அமைத்து தரப்படும் என வாக்குறுதி அளித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

முன்னதாக தி.மு.க. வேட்பாளர் மலையரசன், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஆகியோர் கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுடன் கள்ளக்குறிச்சியில் உள்ள 2 கிறிஸ்தவ ஆலயங்களுக்கு சென்று கிறிஸ்தவர்களிடம் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டனர். அப்போது கிறிஸ்தவர்கள் தங்களின் ஆதரவு உதயசூரியனுக்கு என்று கூறி தி.மு.க. வேட்பாளர் மலையரசனுக்கு வாழ்த்துகள் தெரிவித்தனர்.

இந்த வாக்குச் சேகரிப்பில் திருக்கோவிலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் அய்யனார்,தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன்,மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் தங்கம், மாவட்ட கவுன்சிலர் ஜெய்சங்கர், பொதுக்குழு உறுப்பினர் தகடி கணேஷ், அருந்தங்குடி கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் உதயா, ஊராட்சி மன்றத் தலைவர் தணிகாசலம், மாவட்ட பிரதிநிதிகள் முருகன்,பிரகாஷ் உட்பட மாவட்ட ஒன்றிய கிழக்காலக தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் 'இந்தியா' கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

திருவாரூர் மாவட்ட ஐக்கிய ஜமாஅத் கூட்டமைப்பின் இப்தார் நிகழ்ச்சி!

பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. - எம்.செல்வராஜ் எம்.பி.பங்கேற்பு!

திருவாரூர், ஏப்.3-

திருவாரூர் மாவட்ட ஐக்கியஜமாஅத்கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற இப்தார் எனும் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., எம்.செல்வராஜ் எம்.பி., ஒன்றிய செயலாளர் கே.வி. கே.ஆனந்த் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

பாசிசத்தை வீழ்த்தி இந்தியாவை காக்கும் தமிழ் நாடு முதல்வர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின் படி நாகை நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பிரச்சாரம் முழு வீச்சில் நடைபெற்று வரும் நிலையில் இஸ்லாமியர்கள் புனித மதமான ரமலான் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி திருவாரூர் மாவட்ட ஐக்கிய ஜமாஅத் கூட்டமைப்பின் சார்பில் பொதக்குடி ஜமாஅத் நிர்வாக அறப்பணியினர் நடத்தினர்.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளர் நாகை தேர்தல் கமிட்டி தலைவருமான பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார். நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், மனித நேய மக்கள் கட்சியின் தலைவர் தமீமுன் அன்சாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜமாஅத் நிர்வாக சபை செயலாளர் ரபியுதீன், அனைவரையும் வரவேற்றார்.

த.மு.மு.க. தலைமை நிர்வாக குழு உறுப்பினர் ஹனீபா, திருச்சி ஜமால் முகமது கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகமது ,காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர் துரைவேலன், தி.மு.க. ஒன்றிய செயலாளர் கே.வி.கே.ஆனந்த்,இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட அனைத்து கட்சிகளின் பிரமுகர்கள் பங்கேற்றனர்.

நூற்றுக்கணக்கான இஸ்லாமிய பிரமுகர்கள் பங்கேற்ற இந்த நிகழ்விற்கு ஊர் உரைவின்முறை ஜமாஅத் நிர்வாக சபை அறப்பணிகள் சங்க தலைவர் பதுருல் சாமான் நன்றி கூறினார்.

தஞ்சை நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி சார்பில் போட்டியிடும் கழக வேட்பாளர் ச.முரசொலி ஒரத்தநாடு பகுதியில் வாக்குச் சேகரித்தார். உடன் மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் மரு.அஞ்சுகம் பூபதி, ஒன்றியச் செயலாளர் கார்த்திகேயன், பொதுக்குழு உறுப்பினர் ஜெயக்குமார், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மணவழகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் உள்ளனர்.

மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி
தஞ்சை வடக்கு மாவட்டம்
இந்தியா கூட்டணி தேர்தல் பணிக்குழு
மாவட்டக் கழகச் செயலாளர்
சு.கல்யாணசுந்தரம் M.P. அறிவிப்பு

1.	சு.கல்யாணசுந்தரம் MP	மாவட்ட கழக செயலாளர், திமுக.	94447 46668
2.	செ.ராமலிங்கம் MP	தலைமை செயற்குழு உறுப்பினர், திமுக	9443151525
3.	மு.சண்முகம் MP	மாநிலத்தலைவர், தொ.மு.சங்கம், திமுக.	9444042472
4.	T.R.லோகநாதன்,	மாவட்ட தலைவர், காங்கிரஸ்	9442915942
5.	மு.அ.பாரதி,	மாவட்ட செயலாளர், C.P.I	9865370777
6.	சின்னை பாண்டியன்,	மாவட்ட செயலாளர், C.P.I (M)	9442434178
7.	இரா.ஸ்டாலின்,	மாவட்ட செயலாளர் ம.தி.மு.க	9003093008
8.	க.செ.முல்லைவளவன்,	மாவட்ட செயலாளர், வி.சி.க.	9442915942
9.	ச.தமிழன்,	மாவட்ட செயலாளர், வி.சி.க.	9380650055
10.	சா.கோ.ராஜ்குமார்,	மாவட்ட செயலாளர், வி.சி.க.	9629482190
11.	M.முஹம்மது சுல்தான்	மாவட்ட தலைவர், இ.யூ.மு.லீக்	9488212199
12.	A.ஹிபாயத்துல்லா,	மாவட்ட தலைவர், ம.ம.க.	9092777147
13.	கு.நிம்மதி,	மாவட்ட தலைவர், திராவிட கழகம்	9443031600
14.	ம.செல்வம்,	மாவட்ட செயலாளர், த.வா.க.	9489593761
15.	J.J.அசோகன்,	மாவட்ட செயலாளர், ம.நீ.ம.	9894677073
16.	D.ஆனந்தன்,	மாவட்ட செயலாளர், த.வி.தொ.க.	9489468954
17.	V.செல்வப்பாண்டியன்,	மாவட்ட செயலாளர், மூ.மு.க.	8870349181
18.	திருச்சம்பள்ளி ஷாஜகான்	மாநில அமைப்பு செயலாளர், இ.தே.லீக்	9786722734
19.	முகம்மது இக்பால் சேட்,	மாவட்ட செயலாளர், ம.ஜ.க.	9344302443
20.	சாக்கோட்டை D.மணத்தேரி	மாவட்ட செயலாளர், ச.ம.க.	9698456045
21.	கோ.குட்டி.சிவக்குமார்	மாவட்ட செயலாளர் சிவசேனா UBT கட்சி	9688043330

திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு

கோவி.செழியன், திருவிடைமருதூர் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர்

எஸ்.கே.வேதரத்தினம் மாநில விவசாய அணி துணைத்தலைவர், தொகுதி பார்வையாளர்

1.	நசீர் முஹம்மது,	மாவட்ட அவைத்தலைவர்	9443324430
2.	G.கலியமூர்த்தி,	பொதுக்குழு உறுப்பினர்	9486310570
3.	G.K.M.ராஜா,	இளைஞர் அணி மா.அமைப்பாளர்	9677494949
4.	சுபா திருநாவுக்கரசு,	மகளிர் அணி மா.அமைப்பாளர்	6383534829
5.	S.சரவணன்,	மா.திட்டக்குழு உறுப்பினர்	6381234344
6.	சிவகுருநாதன்,	ஒன்றிய அவைத்தலைவர்	9443525082
7.	P.ரவிச்சந்திரன்,	விவசாய அ.மா.அமைப்பாளர்	9842447018
7.	V.ஜெயபாண்டியன்,	ஒன்றிய அவைத்தலைவர்	9443596560
8.	கோ.மாரியப்பன்,	இலக்கிய அ.மா.அமைப்பாளர்	8524923168
9.	E.சாமிநாதன்,	ஒன்றிய து.செயலாளர்	9443597111
10.	நாக.ரவி,	ஒன்றிய து.செயலாளர்	9442616035
11.	கோ.முல்லைவேந்தன்,	மாவட்ட பிரதிநிதி	9443091965
12.	R.F.இஸ்ரேல்,	மாவட்ட பிரதிநிதி	9943193462

கும்பகோணம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு

க.அன்பழகன் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர்

வண்ணை அரங்கநாதன் மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர், தொகுதி பார்வையாளர்

1.	சு.ப.தமிழழகன்,	மாநகர கழக செயலாளர்	9443086522
2.	குட்டி.தெட்சிணாமூர்த்தி,	தலைமை செயற்குழு உறுப்பினர்	9344300234
3.	R.முருகன்,	வர்த்தகர் அணி அமைப்பாளர்	9942075252
4.	R.லெட்சுமணன்,	அமைப்பு சாரா ஓட்டுநர் அ.மா.அமைப்பாளர்	9443122481
5.	D.R.அனந்தராமன்,	நெசவாளர்.அ.மா.அமைப்பாளர்	9894046069
6.	சா.கணேசன்,	தொண்டர்.அ.அமைப்பாளர்	9345281313
7.	V.செல்வராஜ்,	தொழிலாளர் அ.அமைப்பாளர்	9442431188
8.	A.சுந்தரமூர்த்தி,	அயலக அணி அமைப்பாளர்	9944555554
9.	R.ரகுபதி,	பொறியாளர் அணி மா.அமைப்பாளர்	9750977711
10.	V.சிவக்குமார்,	விளையாட்டு மே.அ.மா.அமைப்பாளர்	9443126565
11.	K.கௌரி,	மகளிர் தொ.அ.அமைப்பாளர்	8344314251
12.	A.சாகுல்ஹமீது,	மா.திட்டக்குழு உறுப்பினர்	9443071651

பாபநாசம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு

உ.மதிவாணன் மாநில விவசாய தொழிலாளர் அணி தலைவர், தொகுதி பார்வையாளர்

கோ.வி.அய்யாராசு தஞ்சை வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர், 9443806213

1.	S.துரைமுருகன்,	தஞ்சை வடக்கு மாவட்ட கழக து.செயலாளர்	9025256200
2.	V.கலைச்செல்வன்,	ஒன்றியக்குழு தலைவர், அம்மாபேட்டை ஒன்றியம்	9443008410
3.	K.செல்வமுத்துகுமரன்,	சுற்றுச்சூழல் அ.மா.அமைப்பாளர்	9787226050
4.	மருது நடராஜன்,	பொதுக்குழு உறுப்பினர்	6374142729
5.	சி.இராஜா,	தகவல் தொ.நு.அ.மா.அமைப்பாளர்	7397122848
6.	சுமதி கண்ணதாசன்,	ஒன்றியக்குழுத்தலைவர், பாபநாசம் ஒன்றியம்	9751252227
7.	ரேவதி நடராஜன்,	பொதுக்குழு உறுப்பினர்	9443150073
8.	P.புகழேந்தி,	மீனவர் அணி மா.அமைப்பாளர்	7539908311
9.	A.செல்வராஜ்,	ஆதி.தி.ந.குழு தலைவர்	9940935703
10.	V.வினோத்குமார்,	விவசாய தொ.அ.மா.அமைப்பாளர்	9843687587
11.	Y.H.ராயல் அலி,	சிறுபான்மையினர் அ.மா.து.அமைப்பாளர்	9843687587

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழக அலுவலகம் தொடர்புக்கு

J.நடராஜன் மாவட்ட கழக பொருளாளர், 9894624974

க.செந்தில்குமார் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், 9566633331

குறிப்பு : தொகுதி பொறுப்பாளர்கள் அந்தந்த தொகுதிக்குட்பட்ட கூட்டணி கட்சி தோழர்களுடன் இணைந்து பணியாற்ற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சு.கல்யாணசுந்தரம் M.P.
மாவட்டக் கழகச் செயலாளர்,
தஞ்சை வடக்கு மாவட்டம்.